மலர் : 10

இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

இதழ் : 9
தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विलेज मिनिस्ट्री

ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

ஜூலை 2010

ஆண்டுசந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ. 250

# 100- கிராம ஊழியம்

## TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை




TVGM - 2010 ஜூலை
கர்த்தரின் வாக்குத்தத்தம்

**அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும்.**

யாத்திராகமம் 12 : 13

எங்கள் திருமணத்திற்காக ஜெபித்த ஒவ்வொருவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

**கிறிஸ்துவுக்குள்,**
**ஸ்டீபன் பெர்சிஸ்**



# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

## TAMIL VILLAGE GOSPEL MISSION

CHIEF EXECUTIVE OFFICER **Letter Dated:08.06.2010**



கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

மிக முக்கியமாக, என்னுடைய திருமணத்திற்காக ஜெபித்தவர்களுக்காகவும், பங்குபெற்றவர்களுக்காகவும், அன்பளிப்புகள் வழங்கியவர்களுக்காகவும் நன்றி சொல்லுகிறேன்.

தொடர்ந்து நாங்கள் குடும்பமாக கர்த்தருடைய ஊழியத்தை, அவருடைய சித்தத்தின்படி செய்வதற்காக ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

கர்த்தருடைய கிருபையினாலும், உங்கள் ஜெபத்தினாலும் ஒரிஸா மாநிலத்தில் 5 ஜெபவீடுகள் கட்டி முடிப்பதற்கும், பிரதிஷ்டை செய்வதற்கும் கர்த்தர் கிருபை செய்தார். **பாஸ்டர் விக்கி** மற்றும் **பாஸ்டர் பீட்டர்** இருவரும் என்னுடைய தகப்பனா ரோடு இணைந்து ஒரிஸாவில் தங்கியிருந்து அனைத்து ஜெப வீடுகளையும் பிரதிஷ்டை செய்து, சிறுவர் இல்லங்களை பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவளித்து தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

**சகோ. எட்வின்** ICRM அவர்கள் என்னுடைய தகப்பனாருக்கு முழு உதவியாக இருந்து, சகலவற்றையும் செய்து கொடுத்தார்கள். நன்றி. தேவனுக்கே மகிமை!

கர்த்தருக்குச் சித்தமானால், இந்தப் பத்திரிகை உங்கள் கையில் கிடைக்கும்பொழுது, தமிழ்நாட்டில் 4 ஜெபவீடுகளை பாஸ்டர் ஜோசப் ஜெபமணி அவர்கள் பிரதிஷ்டை செய்து முடித்திருப்பார்கள் என நம்புகிறேன். இதைக் குறித்து ஆகஸ்டு மாத பத்திரிகையில் வெளியிடுகிறோம்.

**TASOL நிலத்தின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.**

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் பணியில்

**ஸ்டீபன் கிறிஸ்டோபர்.**

## ( இயேசுகிறிஸ்துவின் ) அந்த இரத்தம் உங்கள் வீடுகளில் அடையாளமாயிருக்கும்.

# அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும்.

யாத்திராகமம் 12 : 13

தேவனுடைய வாக்குத்தத்தத்திற்காக காத்துக்கொண்டிருக்கும் என் அன்பு வாசகர்களே! தேவ ஊழியரே!

இந்த மாதத்தில் உங்களுக்கு தேவன் கொடுக்கும் வாக்குத்தத்தம்:

**யாத்திராகமம்12:13**

**அழிக்கும் வாதை**

**உங்களுக்குள்ளே வராதிருக்கும்.**

ஆமென்!

இன்று வித்தியாச, வித்தியாசமான வாதைகள் உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க்கையிலும், தொழில் ஸ்தலங்களிலும், வியாபார ஸ்தலங்களிலும், கம்பெனிகளிலும், சபைகளிலும், நண்பர்கள், உறவினர்கள் மத்தியிலும் கிரியை செய்துக் கொண்டிருக்கின்றன. ஒன்று போனால் ஒன்று, ஒன்று போனால் ஒன்று என்று மனம் வேதனையடைந்து கொண்டேயிருக்கிறது.

வேதனையடைந்து கொண்டிருக்கிற உங்களுக்குத் தான் தேவ வார்த்தை கடந்து வருகிறது.

**அந்த இரத்தம் உங்களுக்குள்ளே அடையாளமாயிருக்கும்.**

**அழிக்கும் வாதை**

**உங்களுக்குள்ளே வராதிருக்கும்.**

நீங்கள் செய்ய வேண்டிய ஒரு காரியம்: **( இயேசுகிறிஸ்துவின் ) இரத்தம் உங்கள் வீடுகளில் அடையாளமாயிருக்கட்டும்.** வீட்டின் ஒவ்வொரு அறைகளிலும் நடந்து திரிந்து இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் உங்களை கழுவி சுத்திக் கரித்துக் கொண்டு, ஒவ்வொரு அறைகளிலும் விசுவாசத்தினால் இயேசுவின் இரத்தத்தை தெளியுங்கள்.

வேதம் சொல்கிறது: **எபி.9:22** கொஞ்சங்குறைய எல்லாம் **( இயேசு கிறிஸ்துவின் ) இரத்தத்தினாலே** சுத்திகரிக்கப்படும். அல்லேலூயா.

அதுமட்டுமா! **1யோவான் 1:7 இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்.**

பக்தன் பாடுகிறார் :

**ஆட்டிக்குட்டி இரத்தத்தினால்**
**சாத்தானை ஜெயித்துவிட்டோம்.**
**ஆவி உண்டு, வசனம் உண்டு,**
**அன்றாட வெற்றி உண்டு**
**வாதை உந்தன் கூடாரத்தை அணுகாது மகனே**
**பொல்லாப்பு நேரிடாது**
**நேரிடாது மகனே**

ஆம் பிரியமானவர்களே! **வாதை உந்தன் கூடாரத்தை அணுகாது.**

**சங்.,91:10**ல் வாசிக்கிறோம்.

ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, **வாதை உன் கூடாரத்தை அணுகாது.**

இந்த மாதத்தில் இந்த அற்புதத்தை உங்கள் வாழ்க்கையில் அனுபவிப்பீர்கள். சாட்சியாயிருங்கள்.

**அழிக்கும் வாதை**

**உங்களுக்குள்ளே வராதிருக்கும்.**

இந்த வார்த்தை யார் மூலம் யாருக்கு கொடுக்கப்பட்டது என்பதை ஞாபகத்திற்கு கொண்டு வருவோம்.

9 வாதைகளை அனுபவித்தும் பார்வோன் ராஜா இஸ்ரவேல் ஜனங்களை ஆராதிக்க அனுப்பவில்லை. இன்று எத்தனையோ குடும்பங்களில் வாதைக்கு மேல் வாதை வந்தாலும், மனைவியை ஆராதிக்க விடுவதில்லை, பிள்ளைகளை ஆராதிக்க விடுவதில்லை. மாமன் மாமியாரை ஆராதிக்க விடுவதில்லை. சில வீடுகளில் **மனைவி புருஷனை ஆராதிக்க விடுவதில்லை.**

வாதைகள் வருவதற்கு முதல் காரணம், ஆராதனை இல்லை, ஆராதனை செய்வதில் தாமதம், அசட்டை, வெறுப்பு.

வேதம் சொல்கிறது: **ஏசாயா 43:21 இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள்.**

உன்னையும் உன் குடும்பத்தையும் தேவன் தெரிந்தெடுத்த நோக்கமே இயேசுவை துதிப்பதற்காக, ஆராதனை செய்வதற்காக, நன்றி பலி ஏறெடுப்பதற்காக மட்டுமே.

துதி ஆராதனை முடிந்த பின்பு தேவஆலயத்திற்குச் செல்லலாம் என்று நினைக்கிற தேவபிள்ளைகளே!

இந்த மாத்தில் உங்களுக்கு இது ஒரு எச்சரிப்பின் வார்த்தையாக இருக்கட்டும்.

ஜெபவீட்டின் துதி ஆராதனைக்கு முந்தி ஒடுங்கள். தேவ வார்த்தையை கேட்பதற்கு செல்லுகிற கர்த்தருடைய பிள்ளையே! உங்கள் வாழ்க்கையில் திருப்பம் வரட்டும். தேவனை துதிப்பதற்கும் முந்திக் கொள்ளுங்கள்.

கர்த்தர் மோசேயிடம், பார்வோனிடம் கூறும்படி சொன்ன வார்த்தையாவது: **யாத். 7:16** வனாந்திரத்தில் எனக்கு ஆராதனை செய்ய என் ஜனங்களை அனுப்பி விட வேண்டும் என்று சொல்லும்படி எபிரேயருடைய தேவனாகிய கர்த்தர் என்னை உம்மிடத்துக்கு அனுப்பியும், இது வரைக்கும் நீர் கேளாமற்போனீர்.

வேதம் சொல்கிறது : **சங். 95 : 8** இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்திரத்தில் கோபம் மூட்டினபோதும் சோதனை நாளிலும் நடந்தது போல, உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள்.

இந்த மாதத்தில் உங்கள் இருதயத்தில் **ஆராதனை, ஆராதனை** என தொனிக்கட்டும்.

அப்பொழுது, **அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும்.**

**சங்.122:1** கர்த்தருடைய ஆலயத்திற்கு போவோம் வாருங்கள் என்று சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன். ஆமென்.

**சங்கீதம் 100: 2**

மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனை செய்து, ஆனந்த சத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள்.

ஆம்! இந்த மாதம் மகிழ்ச்சியோடு கர்த்தருக்கு ஆராதனை செய்யும் மாதமாக மாறட்டும்.

9 வாதைகளுக்கு செவி கொடாத பார்வோனுக்கும், அவனின் ஜனங்களுக்கும் தேவன் கொடுத்த 10வது வாதை தான் தலைப்பிள்ளை சங்காரம்.

ஆனால் இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஒரு ஆலோசனை கொடுக்கப்பட்டது: உங்கள் வீட்டு நிலைக்கால்களில் **ஆட்டுக்குட்டி இரத்தத்தினால் அடையாளம் போடுங்கள்.**

அப்படியானால், சங்காரத் தூதன் வரும்போது, அந்த இரத்தத்தைக் கண்டு அந்த வீட்டை அதம் பண்ணாமல் கடந்துபோவான்.

**அழிக்கும் வாதை**
**உங்களுக்குள்ளே வராதிருக்கும்.**

என் அன்பு தேவபிள்ளையே! தேவ ஊழியரே!

**உங்கள் வீடுகளில்**
**இயேசு கிறிஸ்துவின் இரத்தம்**
**அடையாளமாக இருக்கட்டும்.**

2010 ஆண்டுகளுக்கு முன்னதாக தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து, கல்வாரிச் சிலுவையில் பாடுபட்டு, இரத்தம் சிந்தி, மரித்து உயிர்த்தார். இன்றும் ஜீவிக்கிறார்.

**இயேசு கூறுகிறார்:**

**இது பாவமன்னிப்பு உண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தத்தமாயிருக்கிறது.மத். 26:28**

இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தை எப்பொழுதும் நினைவு கூருவோம்.

பக்தன் பாடுகிறார்:

இரத்தம் ஜெயம் இரத்தம் ஜெயம்
கல்வாரி இயேசுவின் இரத்தம் ஜெயம்

**இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் நமக்கு பலன் என்ன ?**

1. எதிரியை துரத்திடும்
   எந்நாளும் சுகம் தரும்
   அதிகாரம் தந்திடும்
   அதிசயம் செய்திடும்
2. பாவங்கள் போக்கிடும்
   பரிசுத்தமாக்கிடும்
   சாபங்கள் நீக்கிடும்
   சமாதானம் தந்திடும்
3. விடுதலை தரும்
   **வெற்றிமேல் வெற்றி தரும்**
   பெலவீனம் நீக்கிடும்
   பெலவானாய் மாற்றிடும்
4. நமக்காய் பரிந்து பேசும்
   நாள்தோறும் பாதுகாக்கும்
   நீதிமானாக்கிடும்
   நித்திய ஜீவன் தரும்
5. பிரிவினை நீக்கிடும்
   பிளவுகள் போக்கிடும்
   ஒப்புரவாக்கிடும். ஒருமனமாக்கிடும்.

பின்வருமாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்:

**இயேசுகிறிஸ்துவின் இரத்தம்**
**எங்கள் வீடுகளில்**
**அடையாளமாயிருக்கும்.**
**அழிக்கும் வாதை**
**எங்களுக்குள்ளே வராதிருக்கும், எங்கள் குடும்பத்திற்குள்ளே வராதிருக்கும், எங்கள் சபைக் குள்ளே வராதிருக்கும்.**

இப்படி அறிக்கை செய்யும்போது,

**அழிக்கும் வாதை**
**உங்களுக்குள்ளே வராதிருக்கும்.**
**தேவனுக்கே மகிமை!**

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ. 4 : 5**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் '**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

## கன்னியாகுமரி மாவட்டம் - குருந்தன்கோடு
## 100 - கிராம ஊழியம்

***நோக்கம்:*** **2010 ஜூலை 19** திங்கள் காலை 9 மணி முதல் **ஜூலை 23** வெள்ளி இரவு 10 மணி முடிய **குருந்தன்கோடு யூனியன் கிராமப் பகுதிகளில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2010 ஜூலை 19** திங்கள் காலை **9 - 1** மணி

**கடைசி நாள் ஜெபம் : 2010 ஜூலை 23** வெள்ளி இரவு **7 - 10** மணி

**( 2010 ஜூலை 19 - 23 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**யாவே யீரே நற்செய்தி ஊழியங்கள்**
**காட்டு விளை,**
**திங்கள் சந்தை**
**கன்னியாகுமரி மாவட்டம்.**
**செல்: 98658 26424, 99432 81640**

**நன்றி** : உதவி செய்ய முன் வந்த Rev.S.**ஜோசப் சுந்தர்** அவர்களுக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

***பிரயாணப்படி :*** தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

***முக்கிய அறிவிப்பு :*** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

***சகல தொடர்புகளுக்கும் :*** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94871 92763**

துதி,கனம்,மகிமை இயேசுகிறிஸ்துவுக்கே!

# செயிண்ட் தாமஸ் மவுண்ட் யூனியன் 100-கிராம ஊழிய அறிக்கை

**THANKS: The Light House Ministries.NECK - ELC**



கர்த்தருடைய கிருபையால் திருவள்ளூர் மாவட்டம் – செயிண்ட் தாமஸ் மவுண்ட் யூனியனில் 24.05.2010 முதல் 28.05.2010 வரை **“100 கிராம ஊழியம்”** மிகவும் ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல் நாள், கடைசி நாள், கூடுமிடம், உணவு, பார்சல் செலவுகளை குரோம்பேட்டை SYBOCS திருச்சபை **பாஸ்டர் அந்தோணி** அவர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள். 100–கிராம ஊழியர்களுக்கு **சகோ.பிரேம் ஆனந்த், சகோதரி மேரி செல்லாபாய், சகோதரி மணியம்மாள், சகோதரி தேவகிருபை** ஆகியோர் இனிப்பு பாக்கெட்டுகள் கொடுத்து உற்சாகப்படுத்தினார்கள்.

தமிழ்நாட்டிலிருந்து 59 கிராம ஊழியர்கள் கலந்து கொண்டு ஊழியம் செய்தார்கள். முதல்நாள் ஜெபத்தில் **செயிண்ட் தாமஸ் மவுண்ட்** யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்களையெல்லாம் வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப் பட்டது. **சகோ. P.T. கிறிஸ்டோபர்** ஊழியங்களுக்காக ஜெபித்தார்கள்.






பின்பு TVGM காரியதரிசி **சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபருடைய** திருமணத்தை முன்னிட்டு கிராம ஊழியர்களுக்கு புத்தாடைகள் வழங்கினார்கள்.

அதன் பின்பு ஊழியர்களை 12 குழுக்களாக பிரித்து, ஒவ்வொரு குழுவினரும் தனித் தனியாக தாங்கள் ஊழியம் செய்யப் போகிற கிராமங்களுக்காக ஜெபித்தனர். மதியஉணவிற்கு பிறகு கிராமத்திற்குள் கடந்து சென்று, 4 நாட்கள் கிராமங்களில் தங்கி ஊழியம் செய்தார்கள்.

ஊழியங்களை முடித்து, கடைசி நாளில் மீண்டும் முன்புக் கூடிய அதே இடத்தில் கூடி ஜெபித்து, கர்த்தர் கிராமங்களில் தங்களை எப்படியாக நடத்தினார் என்பதை சாட்சியாகச் சொல்லி தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

குரோம் பேட்டை **பாஸ்டர் அந்தோணி** தேவசெய்தி கொடுத்தார்கள். மதிய விருந்து **SYBOCS** சபையின் சார்பில் வழங்கப் பட்டது. பின்பு சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோப ருடைய திருமணத்தில் கலந்து கொள்ள சென்றார்கள்.

இந்த ஊழியத்தின்போது கிராமங்களில் 12,647 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள், 18,500 கைப்பிரதிகள், 10,000 சிலுவைக் கொடிகள் இலவசமாக வழங்கப்பட்டது. 122 புறமதநண்பர்கள் தங்கள் விலாசங் களைக் கொடுத்து, வேதபாடங்களை தபால் மூலம் அனுப்பும்படி கேட்டுக் கொண்டார்கள். **தேவனுக்கே மகிமை!**

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு 1: சகோதரி மேரி செல்லாபாய், மணியம்மாள், தேவகிருபை, லீதியாள், சலோமி சம்மனசு.**

நாங்கள் கிராமங்களில் வீடுவீடாக சென்று யோவான் புத்தகம் கொடுத்தோம். அனைவரும் அன்புடன் வாங்கினர். சில வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 900 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 2: சகோதரி ராணி சந்திரா, லூயிஸ், மேரி மீனா, தெபோராள், செல்லக்கனி.**

கிராமத்தில் ஒருவரின் வீட்டில் எங்களை அழைத்து ஜெபிக்கும்படி கேட்டார்கள். அவர்கள் கை, கால்களில் பலவித கயிறுகளை கட்டியிருந்தார்கள். இந்த கயிறுகளை அறுத்தால் தான் விடுதலை கிடைக்கும் என்று சொன்ன போது, கத்தரிக்கோலை கொண்டு வந்து தந்து நீங்களே வெட்டுங்கள் என்று சொன்னார்கள். இயேசுவின் நாமத்தில் ஜெபித்து கட்டுகளை அறுத்து விட்டோம். இனி சர்ச்சுக்கு போவோம் என்று சொல்லி ஒப்புக்கொடுத்தார்கள். மொத்தம் 1080 சுவிசேஷப் புத்தகங்கள், 850 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 3: சகோதரி எஸ்தர் கனகாம்புஜம், ஜெபமணி, அன்னக்கிளி, மெர்சி, கிளமெண்ட்ஸ்மேரி.**

நாங்கள் பெரியார் நகரில் தங்கியிருந்து ஊழியம் செய்தோம். அநேகருக்காக ஜெபித்தோம். பிறந்து 9 நாள் குழந்தை தொடர்ந்து அழுதுகொண்டேயிருந்தது. நாங்கள் ஜெபித்தோம். அழுகை நின்று சுகமாக இருந்தது. வேறு ஒருவர் எங்களைப் பார்த்து உங்களுக்கு வேறு வேலை இல்லையா ? இப்படி வெயிலில் அலைகிறீர்களே ? என்றார். இது தான் எங்கள் வேலை என்று சொல்லி விட்டுப் போனோம். 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 940 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 4: சகோதரி மரியம்மாள், கிரேஸ் பத்மா, எஸ்தர் பேபி, அன்னாள், அபியேல் அந்தோணியம்மாள்.**

கிராமங்களில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தபோது, கால்வலியால் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த ஒரு சகோதரிக்காக ஜெபித்தோம். அந்த சகோதரிக்கு உடனே கால்வலி சுகமாகி விட்டது என்று சொன்னார்கள். மதியம் சிறிது நேரம் இளைப்பாறுவதற்காக உட்கார்ந்து இருந்தோம். 3 போலீஸ் அதிகாரிகள் வந்து இங்கு ஏன் உட்கார்ந்து இருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். சுவிசேஷப் புத்தகத்தைக் கொடுத்தோம். அவர்கள் சுவிசேஷப் புத்தகத்தை வாங்கி வணங்கிவிட்டு, சரி ஊழியம் செய்யுங்கள் என்று கூறி போய் விட்டார்கள்.மொத்தம் 1220 சுவிசேஷப் புத்தகங்கள், 930 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 5: சகோதரி பிச்சையம்மாள், எஸ்தர், ரெபேக்கா லட்சுமி, கிருபா பழனியம்மாள், தேவபாக்கியம்.**

கிராமங்களில் ஜனங்கள் சந்தோஷமாக புத்தகங்களை வாங்கி வாசித்தார்கள். சில பிரச்சனையுள்ள பெண்களுக்காக ஜெபித்தோம். **நாகல் கேணி** என்ற ஊரில் சிலர் எங்களை இப்படி செய்வதால் உங்களுக்கு எவ்வளவு சம்பளம் என்று கேட்டார்கள். எங்களுக்கு பரலோகத்தில் நிறைய சம்பளம் உண்டு. நீங்களும் இயேசுவை மெய்யான கடவுள் என்று ஏற்றுக் கொள்ளுங்கள் என்றோம். அதற்கு அவர்கள் உங்கள் பரலோகம் எங்களுக்கு வேண்டாம் என்று இரு கையைக் கூப்பி சொல்லி விட்டுப் போனார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6: சகோதரி விமலா, சாந்தி, ஏஞ்சலின், கஸ்தூரி, மரியாள்.**

நாங்கள் கிராமங்களில் யோவான் புத்தகம் கொடுத்து சுவிசேஷம் அறிவித்த போது, யாரும் எங்களை எதிர்க்க வில்லை. மொத்தம் 1100 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7: சகோ. பால்ராஜ், சாமுவேல், சூசைமாணிக்கம், செபஸ்டியான்.**

பம்மல் ஊராட்சியிலுள்ள பகுதிகளில் வீடுகள் தோறும் சுவிசேஷத்தை அறிவித்தோம். அநேக குடும்பங்களில் ஜெபம் பண்ண கேட்டுக் கொண்டதால் ஜெபம் செய்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8: சகோ.மாற்கு மாரியப்பன், மகாராஜன், பாண்டியன், தானியேல்.**

பச்சை மலையை சுற்றியுள்ள கிராமங் களில் வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்தோம். யாவரும் ஆர்வமுடன் வாங்கிக் கொண்டனர். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 9: சகோ.ஜோசப் முரளிதரன், ஜோசப் தார்சீஸ், தாவீது தங்கவேல், அந்தோணி.**

**கிருஷ்ணாநகர், ராஜிவ்நகர், ஈஸ்வான் நகர்** ஆகிய பகுதிகளில் யோவான் புத்தகம் கொடுத்தோம். ஒரு தம்பிக்கு நான்கு நாட்களாக ஜுரத்தின் காரணமாக துாங்கவில்லை, மருத்துவ மனையில் மருந்து வாங்கித் தந்தும் குணமாகவில்லை என்று எங்களிடம் ஜெபம் பண்ணுங்கள் என்றார்கள். நாங்கள் ஜெபம் பண்ணி முடிப்பதற்குள் அந்த தம்பி நன்றாக ஜுரம் சுகமானது. நன்றாக துாங்கினான். மொத்தம் 1187 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 10: சகோ.இஸ்ரவேல், நோவா, ஜெபமலைநாதன், பீட்டர் ராமலிங்கம், பாபு சாலமோன்.**

நாங்கள் சுவிசேஷம் அறிவித்த பகுதிகள் யாவும் பிராமணர்கள் குடியி ருக்கும் பகுதியாகும். இங்கு வீடுகளில் புத்தகம் கொடுத்தபோது, யாவரும் உற்சாகமாக வாங்கினார்கள். **நாகப்பா நகரில்** சில இந்து நண்பர்கள் பகவத் கீதை தருகிறோம் வாங்குவீர்களா ? என்று கேட்டார்கள். தாருங்கள் என்றபோது அவர்களிடம் புத்தகம் இல்லை. இயேசுவே மெய்யான கடவுள் என்று சொல்லி விட்டு வந்தோம். 1050 சுவிசேஷப் புத்தகங்கள், 850 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 11: சகோ. எபிநேசர், யோசுவா, இஸ்தாக்கி, ஸ்டீபன் குருசாமி.**

கிராமத்தில் ஒரு பிராமணரிடம் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தபோது,

அவர் அதை வாங்கி இரண்டு கண் களிலும் ஒத்தி மிகுந்த பயபக்தியுடன் வாங்கினார். இதேபோல இப்பகுதியில் உள்ள யாவரும் உற்சாகமாக வாங்கிக் கொண்டார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 840 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 12: சகோதரி அந்தோணிமேரி, அமிர்தம், ஷீலா, மேரி சரோஜா, ரோணிக்கம், சகோ. சரவணன்.**

அனகாபுத்தூர் ஊராட்சியிலுள்ள கிராமங்களில் வீடுகள்தோறும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தபோது, யாவரும் ஆர்வமாக வாங்கினார்கள். சிலர் ஜெபிக்கக் கேட்டார்கள். வியாதியஸ்தர் களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 1100 சுவிசேஷப் புத்தகங்கள், 690 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை!**

இயேசு கூறுகிறார் :

## என் சபையைக் கட்டுவேன்

கர்த்தர் உங்களுக்குக் கொடுத் திருக்கும் சபை விசுவாசிகளை கொண்டு, சுவிசேஷ ஊழியம் செய்து, உங்கள் சபைகளை வளர்க்கவும், தேவனுடைய ராஜ்யம் விரிவடையவும் வாஞ்சிக்கிறோம். கிராம ஊழிய அனுபவ சாட்சி களுடன், உங்கள் சபை விசுவாசி களுக்கு **உங்கள் சபையில் வைத்து** பயிற்சிக் கொடுக்க விரும்பினால் சகோ. P.T. கிறிஸ்டோபர்,TVGM ஸ்தாபகருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

செல் : **94435 44628**

ஈமெயில் : **100village@tvgm.org**

## 100- கிராம ஊழியத்தின் தேவைகளுக்காக ஜெபியுங்கள்!

மாதந்தோறும் குறைந்தபட்சம் **10,000** வீடுகளுக்கு சுவிசேஷப் புத்தகம் 100−கிராம ஊழியத் தன்னார்வத் தொண்டர்கள் மூலம் **இலவசமாக** வீடுகள் தோறும் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

ஒரு யோவான் புத்தகம் ஒரு வீட்டிற்கு விநியோகிக்க தன்னார்வத் தொண்டர் செலவுடன் ரூ. 5/− ஆகிறது.

இவ்வாறாக **10,000** வீடுகளுக்கு யோவான் சுவிசேஷம் இலவசமாக விநியோகிக்க ரூ. **50,000/-** செலவாகிறது.

நீங்கள் மாதந்தோறும் எத்தனை வீடுகளுக்கு சுவிசேஷப் புத்தகம் விநியோகிக்க பொருளு தவியினால் தாங்குவதற்கு கர்த்தரால் ஏவப்படுகிறீர்கள் என்பதை எங்களுக்கு தெரியப் படுத்தி உதவுங்கள்.

**இரண்டாவதாக,** நீங்களும் ஒருமுறை 5 நாட்கள் கிராம ஊழியத்தில் நடந்து, திரிந்து உங்கள் சாட்சியுடன் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்க அன்புடன் அழைக்கிறேன்.

**நாம் ஒருமித்து தேவனுடைய நாமத்தை உயர்த்துவோமாக!**

**தேவனுக்கே மகிமை!**

## ❖ 2010 மே மாதம் இயேசுவை விரும்புவோர் முகாம் அறிக்கை ❖

### முகாமில் கலந்து கொண்டவர்கள்




கர்த்தருடைய கிருபையால் பெரம்பலூர் மாவட்டம் – **வேப்பூர்** யூனியன் நாலுரோடு **நித்திய ஜீவ ஒளி** சபையில் 15.05.2010 அன்று **இயேசுவை விரும்புவோர் முகாம்** நடைபெற்றது.

இம்முகாமிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் **பாஸ்டர் பர்னபாஸ்** சிறப்பாக செய்திருந்தார்கள்.

இம்முகாமில் கிறிஸ்தவ விசுவாசிகள் 15 பேர் கலந்து கொண்டார்கள். கடிதத் தொடர்பு ஊழியத்தில் தொடர்பு கொண்ட ஒரு சகோதரியும் கலந்து கொண்டார்கள். இவர்களுக்கு சபையில் ஐக்கியம் கொண்டு விசுவாசத்தில் வளருவது பற்றி விளக்கி கூறப்பட்டது.

**பாஸ்டர் பர்னபாஸ்** யாவருக்காகவும் ஜெபித்தார்கள். **நித்திய ஜீவ ஒளி** சபையின் சார்பாக யாவருக்கும் சிறப்பான ஆகாரம் வழங்கப்பட்டது.

**தேவனுக்கே மகிமை!**

## 2010 ஜுலை மாத இயேசுவை விரும்புவோர் முகாம்

மாவட்டம் : வேலூார்
யூனியன் : அரக்கோணம்
நாள் : 10.07.2010
நேரம் : காலை 9 மணி

### கூடுமிடம்

**பாஸ்டர் A.M.S. ஜோசப்**
**பெத்தேல் கிறிஸ்டியன் அசெம்பிளி**
**43-A, அம்பேத்கார் நகர்**
**மோசூர் ரோடு**
**அரக்கோணம் - 631 001.**
**வேலூார் மாவட்டம்.**
செல்: 9994216499

## TVGM சிறுவர் இல்ல டாய்லெட் மற்றும் பாத்ரூம் பொருளாதார தேவைகள்

அரசாங்க ஆணையின்படியும், சமூக சேவை நிறுவனத்தார் நமக்கு கொடுத்திருக்கிற ஆலோசனையின்படியும் சிறுவர் இல்லத்திற்கு முதல் கட்டமாக **8 டாய்லெட், பாத்ரூம்** மிக அவசரமாக கட்ட வேண்டிய நிர்ப்பந்தமான நிலையில் உள்ளோம்.

ஒரு டாய்லெட், பாத்ரூம் கட்டுவதற்கு உத்தேசமாக ரூ. 20,000/- தேவைப்படுகிறது.

**நீங்கள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பொறுப்பேற்க முன்வருவீர்களா?**

# TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு 2010 பள்ளிக்கூடத் தேவைகள்!

*மொத்தப் பிள்ளைகள் 50 பேர் ( அதிகபட்சம் )*

| ஸ்கூல் யூனிபார்ம் | ஸ்கூல் பீஸ் | நோட்டுப் புத்தகம் |
|---|---|---|
| ரூ. 12,000 | ரூ. 13,500 | ரூ. 9, 500 |

மொத்தம் ரூ. **35000/-** தேவை!

***சந்தோஷ் வித்யாலயாவில் 2 பிள்ளைகள் படிக்கிறார்கள். அவர்களின் ஜுன் மாதத் தேவைகளையும், தொடர்ந்து மாதந்தோறும் கட்ட வேண்டிய பீஸ் விபரத்தையும் கீழே குறிப்பிடுகிறோம்.***

*அட்மிஷன்* ரூ. 12600/- *மாதந்தோறும்* ரூ.1700/-

*அட்மிஷன்* ரூ.13090/- *மாதந்தோறும்* ரூ.1600/-

**மேற்கண்ட இரண்டு பிள்ளைகளுக்கும் ஸ்பான்சர் தேவை!**

கடந்த இரண்டு வருடங்களாக மேற்கண்ட இரண்டு பிள்ளைகளுக்கும் மாதந்தோறும் கல்விக் கட்டணம் செலுத்தக்கூடிய ஸ்பான்சர்கள் இதுவரையிலும் கிடைக்காதபடியால் மேற்கொண்டு எந்த பிள்ளைகளையும் சந்தோஷ் வித்யாலயாவில் சேர்க்க முடியாத நிலையிலுள்ளோம்.

முதலாவது இந்த இரண்டு பிள்ளைகளுக்கும் மற்றும் திருச்சியில் கல்வி பயின்று வரும் பிள்ளைகளுக்கும் கல்வித் தேவைகள் பூரணமாக சந்திக்கப்பட ஜெபித்து வருகிறோம். நீங்களும் ஜெபியுங்கள்.

## தொழுநோயாளர், பார்வையற்றோர் மற்றும் ஊழியர்கள் பிள்ளைகளின் படிப்பு கட்டணம்

TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகள் மாத்திரமல்ல, நாம் ஊழியம் செய்யும் தொழுநோயாளர் காலனியிலிருந்தும் , பார்வையற்றோர் இல்லங்களிலிருந்தும் மற்றும் வடஇந்திய ஊழியர்கள், கிராம ஊழியர்கள் அநேகர் பிள்ளைகளின் படிப்பிற்கு உதவி கேட்டு தபால் எழுதுகிறார்கள். அவர்களின் படிப்பிற்கு நம்மால் உதவி செய்ய முடியாவிட்டாலும், தகுதியானவர்களுக்கு எங்களால் இயன்ற ஒரு பங்கை செய்ய வாஞ்சிக்கிறோம். இதற்காகவும் ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## தேவனுக்கே மகிமை!

2010 மார்ச், ஏப்ரல் மாதங்களில் TVGM ஏலீம் சிறுவர் இல்லப் பிள்ளைகள் 44 பேர் பரீட்சை எழுதினார்கள். கர்த்தருடைய கிருபையினாலும், உங்கள் ஜெபத்தினாலும் 44 பேரும் தேர்ச்சி பெற்று விட்டார்கள். ஜெபித்த, கொடுத்த அனைவருக்கும் நன்றி!

## TVGM 12 மணி நேர துதி ஆராதனை & வாக்குத்தத்த தேவசெய்தி

**அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும்.** யாத். 12:13

**நடு இரவு ஜெபம் - மறு நாள் துதி ஆராதனை**

| | |
|---|---|
| **நாள் : 30.06.2010** புதன் | **நாள் : 01.07.2010** வியாழன் |
| **நேரம் :** 7PM முதல் 12Mid Night | **துதி ஆராதனை நேரம் :** 7AM-7PM |
| **இராப்போஜனம் :** இரவு 12மணி | **வாக்குத்தத்த செய்தி :** 7PM-8PM |

**இடம்:** **TVGM தலைமை அலுவலகம்,**
**100 – கிராமம்,**
**திருச்சி – 620 102.**

## கன்னியாகுமரி மாவட்ட TVGM அறிமுகப்பணி அலுவலகம் 2010 மே மாத ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் 2010 மே மாத ஊழியங்களை கர்த்தர் விசேஷித்த விதமாக ஆசீர்வதித்தார். மே மாதத்தில் முதல் வாரம், இறுதி வாரம் இரண்டிலுமாக பத்து நாட்கள் சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபரின் திருமணம், திருச்சி ஊழிய நிகழ்ச்சிகள் மற்றும் பிரயாணங்களில் கழிந்து விட்டன. ஒரு சில இடங்கள் தவிர எல்லா இடங்களுக்கும் கடந்து சென்று துரிதமாக ஊழியங்களை நிறைவேற்ற கர்த்தர் எங்களை பெலப்படுத்தினார்.

ஜுலை 2010ல் 100–கிராம ஊழியம் கன்னியாகுமரி மாவட்டத்தில் செய்யவேண்டும். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. குருந்தன்கோடு யூனியனுக்காக விசேஷமாக ஜெபித்து செயல்படுகிறோம். கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார் என்று விசுவாசிக்கிறோம்.

அலுவலக வேலைக்கு புதிதாக கர்த்தர் தந்துள்ள சகோதரிக்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம். மேலும் வெளி ஊழியங்களுக்கு இன்னும் 3 பேர் தேவை. ஜெபியுங்கள். ஜெபமே ஜெயம்.

**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001 செல்: **98658 26424** போன் : **04652 - 277251**

கிறிஸ்துவின் பணியில்,
ஷோபனா இவான்சலின்.

**குறித்தகாலத்துக்குத் தரிசனம்**

**இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது.** ஆபகூக் 2: 3

# THE AMBASSADOR SCHOOL OF LEARNING

## TASOL தரிசனத்தை நிறைவேற்ற அழைக்கப்பட்டவர்கள் தேவை!

## சிந்தியுங்கள்! செயல்படுங்கள்!

**இன்று கர்த்தர் உங்களை உயர்த்தி ஆசீர்வதித்திருக்கிறார்.** உங்கள் பெற்றோர் உங்களை உயர்ந்த படிப்பு படிக்க வைத்தபடியினால் இன்றைக்கு **முதலாவது நீங்கள் ஆசீர்வாதமாக இருக்கிறீர்கள்.**

**இரண்டாவது நீங்கள் அநேகருக்கு ஆசீர்வாதமாகயிருக்கிறீர்கள்.**

இதோடு நின்று விடாதபடிக்கு, இனிமேல் **உங்கள் வருங்கால சந்ததி உயர்மட்ட அளவில் கிறிஸ்தவ அதிகாரிகளாக எழும்ப வேண்டுமென்ற ஒரு ஆத்தும தரிசனம்** உங்களுக்குத் தேவை.

பாதர் பெர்க்மான்ஸ் அவர்களுக்கு கர்த்தர் கொடுத்த தரிசன பாடலின் கவி ஒன்றை கீழே குறிப்பிடுகிறேன்:

**எதிர்காலம் நமக்குண்டு எதற்கும் பயமில்லை**
**அதிகாரம் கையிலே ஆளுவோம் தேசத்தை – நாம்**
**ஒன்று சேர்ந்து நாம் துதிப்போம் சாத்தானை மிதிப்போம்**
**தேசத்தை சுதந்தரிப்போம் – நம் இயேசு நல்லவர் . . .**

இந்த தரிசனத்தை நிறைவேற்றவே கர்த்தர் கொடுத்த ஒரு திட்டம் **TASOL** முதல் கட்டமாக நிலம் வாங்கும் திட்டத்தில் விசுவாசத்தில் இறங்கியுள்ளோம். **நிலத்தின் மொத்த விலை** ரூ. 30,00,000 ( 1 US $ = IRs 45 Approx )

**ரூ. 1 லட்சம் ( ரூ.100,000 ) கொடுக்கக்கூடிய 30 பேர்கள்**

**( அல்லது )**

**தங்களால் இயன்றதை கொடுக்கக்கூடியவர்கள் தேவை!**

**Name: TASOL** **A/c No:1249101038110** Canara Bank
Puthur Branch code **0930** **Tiruchirapalli.** TamilNadu, South India.

**தொடர்புகளுக்கு:-** *சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்,* C.E.O. TASOL

ஈமெயில்: 100village@tvgm.org
stephen@tvgm.org

**கிறிஸ்துவுக்குள்**
P.T.கிறிஸ்டோபர், TVGM ஸ்தாபகர்.

## TVGM தலைமை அலுவலகத்திற்கு வந்த சாட்சிகள்!

**சகோ.இஸ்ரவேல், விருதுநகர்.**

என் தங்கையின் கணவர் வயிற்றுவலியினால் மூன்று நாட்கள் அவதிப்பட்டார். 100–கிராம ஊழியத்திற்கு சாட்சி எழுதுவதாக பொருத்தனையோடு ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு வயிற்றுவலியிலிருந்து சுகம் கொடுத்தார்.

**சகோதரி மெபல்லா, திண்டுக்கல்.**

என் மகனின் திருமணத்திற்காக ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். நீங்களும் ஜெபித்தீர்கள். கர்த்தர் என் சகோதரரின் மகளையே மணமகளாக தந்து, திருமணத்தை சிறப்பாக நடத்தித் தந்தார். தேவனுக்கே மகிமை.

**சகோ. தேவசகாயம், கடலூர்.**

என் பேரன் காருண்யா பல்கலைக் கழக நுழைத்தேர்வில் வெற்றி பெறவும், இடம் கிடைக்கவும் ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் நுழைவுத் தேர்வில் வெற்றியைக் கொடுத்து, இடம் கிடைக்க கிருபைச் செய்தார்.

**சகோதரி சாந்தி பிரேம், சென்னை.**

என் அம்மாவுக்கு உடல்நலம் சரியில்லாமல் இருந்தது. மருத்துவர்கள் பரிசோதனை செய்துவிட்டு வயிற்றில் கட்டி இருக்கிறது என்றும், மறுபடியும் ஒரு சோதனை செய்ய வேண்டுமென்றும் கூறினார்கள். அப்பொழுது 100– கிராம ஊழிய சகோதரி மணியம்மாள் வந்து ஜெபித்துவிட்டு, அம்மாவுக்கு ஒன்றும் இருக்காது என்றார்கள். கர்த்தரின் கிருபையால் கட்டி எதுவும் இல்லாமல் அம்மா சுகத்துடன் இருக்கிறார்கள்.

**சகோ. பஞ்சவர்ணம், இராம்நாடு.**

4 வருடங்களுக்கு முன்பு சகோ.P.T. கிறிஸ்டோபர் **'வீடு கட்டுவீர்கள்'** என தீர்க்கதரிசனமாக சொன்னார்கள். அதே போல் 2009ல் கர்த்தர் ஒரு வீட்டை கட்டி முடிக்க உதவி செய்தார்.

**சகோதரி நிர்மலா, திருச்சி.**

என் திருமணத்திற்காக ஜெபிக்க கடிதம் எழுதினேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு 19.02.2010 அன்று திருமணத்தை ஆசீர்வாதமாக நடத்தித் தந்தார்.

**சகோதரி அனுசுயா, திருச்சி.**

என் மகன் +2 தேர்வில் வெற்றி பெற கடிதம் எழுதியிருந்தேன். வெற்றி பெற்றுவிட்டான். ஆனால் மதிப்பெண் குறைவாக எடுத்திருந்தான். ஜெபித்தேன். கர்த்தர் மகனுக்கு B.E. படிக்க இடம் கிடைக்க செய்தார். தேவனுக்கே மகிமை.

**இலுப்பூரிலிருந்து வந்த சாட்சி:**

என் மகள் கிருபாசெல்வியின் சுக பிரசவத்திற்காக ஜெபிக்கக் கேட்டேன். தாங்கள் என் மகளுக்காக ஜெபித்த ஜெபத்தை கர்த்தர் கேட்டு 24.05.10 அன்று சுகபிரசவத்தில் நல்லதொரு ஆண் குழந்தையை தந்தார்.

**அன்பானவர்களே!** *நீங்களும் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுகொண்ட நன்மைகளை சாட்சியாக எழுதுங்கள். தேவனுடைய நாம மகிமைக்கென்று பத்திரிக்கையில் வெளியிடுகிறோம். ஜெப விண்ணப்பங்களையும் அனுப்பி வையுங்கள். ஜெபிக்கிறோம்.* ***கர்த்தர் பதில் கொடுப்பார்.***

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

“**நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது**”. **யாக்.** 5:16

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள்: சகோ.ஸ்டீபன் & பெர்சீஸ்** திருமணத்தை தேவன் அற்புதமாக நடத்தி தந்ததற்காக தேவாதி தேவனைத் துதியுங்கள். தொடர்ந்து இருவரும் இணைந்து தேவனுடைய நாமத்தை உயர்த்தும்படியாகவும், தேவசித்தத்தின்படி தேவ ராஜ்யத்தை கட்டி எழுப்பும்படியாகவும் ஜெபியுங்கள்.

**செவ்வாய்:** சகோ.ஸ்டீபனுக்கு கர்த்தர் கொடுத்த **TASOL தரிசனத்தை** செயல்படுத்த நல்ல ஆலோசகர்கள், ஜெபவீரர்கள், உதவியாட்கள், பொருளாதார வாசல்கள் கர்த்தரே திறக்கும்படியாக ஜெபியுங்கள்.

நம் தேசத்தில் உயர்மட்ட அளவில் அநேக கிறிஸ்தவ அதிகாரிகள் எழும்பி, **கிறிஸ்துவுக்கு சாட்சியாக** நின்று நேர்மையான ஆட்சி புரிய ஜெபியுங்கள்.

**புதன்:** நமது **ஆதி தரிசனம்** மறக்கப் படாமல் ஆலயமில்லாத கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு பின்தொடர் பணி நடைபெறவும், சீஷத்துவப் பயிற்சி மூலம் அநேக ஜெபக்குழு தலைவர்கள் எழும்பவும், ஆலயமில்லாத கிராமங்கள் தோறும் ஜெப வீடு கட்டி எழுப்பப்படவும், சிறுவர் இல்லத்தில் அநேக பிள்ளைகள் தங்கியிருந்து கல்வி பயின்று இயேசுவுக்கு சாட்சியாக விளங்கவும் ஜெபியுங்கள். தையற்பள்ளி மற்றும் தொழுநோயாளர், பார்வையற்றோர் மத்தியில் செய்யப்பப்படும் ஊழியத்தின் மூலம் இயேசுகிறிஸ்துவின் நாமம் மகிமைப்பட ஜெபியுங்கள். இந்த தரிசனமானது வடமாநிலங்களில் இன்னும் அதிகமாக பெருக ஜெபியுங்கள்.

**வியாழன்:** TVGM மற்றும் TASOL ஊழியங்களுக்காக ஜெபிக்கிற, கொடுக்கிற, உழைக்கிற, அறிமுகப்படுத்துகிற அநேக தன்னார்வத் தொண்டர்களும், முழுநேர பணியாளர்களும் ஒவ்வொருநாளும் புதிதுபுதிதாக எழும்பவும், தொடர்ந்து வாழ்நாள் முழுவதும் இணைந்து செயல்படவும் கர்த்தர் கிருபை புரிய ஜெபியுங்கள். இதுவரை நம்முடைய தரிசனத்தோடு இணைந்து செயல்படும் ஒவ்வொருவருடைய குடும்பத்திலும் தேவ கிருபை, தேவ ஆசீர்வாதம், தேவ சமாதானம் பெருகும்படி ஜெபியுங்கள்.

**வெள்ளி:** TVGM மூலம் அநேக கிராம ஊழியர்கள் நன்மை பெறவும், சிறுசிறு ஸ்தாபனங்கள் வளர்ச்சி பெறவும், நல் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளவும் ஒருமித்து தேவனுடைய நாமத்தை உயர்த்தும்படியாகவும் ஜெபியுங்கள்.

**சனி:** தேவனுடைய ராஜ்ய விஸ்தரிப்புக்காக பாடுபடும் ஒவ்வொரு ஸ்தாபனங்களையும், தனிப்பட்ட நபர்களையும் கர்த்தர் ஆசீர்வதிக்கும்படியாகவும், அவர்கள் தேவைகள் சந்திக்கப்படும்படியாகவும் ஜெபியுங்கள்.

**ஞாயிறு :** ஊழியர்களுக்கு விரோதமாக செயல்படும் எல்லா அந்தகாரக் கிரியைகளும் கட்டப்படும்படியாகவும், சத்துரு கட்டி வைத்திருக்கிற எல்லா கட்டுகளும் அவிழ்க்கப்படும்படியாகவும் தேவனுடைய நாமம் உயர்த்தப்படும்படியாகவும் **ஜெபியுங்கள். துதியுங்கள்.**

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்
தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி.9:7


**TVGM தலைமை அலுவலக முகவரி**

100-கிராம ஊழியம், ஜெபவீடு, சிறுவர் இல்லம், ( காணிக்கைகள் )
பத்திரிக்கை சந்தா, ஜெபவிண்ணப்பம் & சகல தொடர்புகளுக்கும்:-

MR.STEPHEN CHRISTOPHER,
MANAGING DIRECTOR.
**TAMIL VILLAGE GOSPEL MISSION**
"100 - VILLAGE"
SOMARASAMPETTAI, ( HOSPITAL STOP )
TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.

STD Ph : 0- 431 - 2607241
FAX : 0- 431 - 2607446
CELL Bro.Stephen : 94871 92763
Bro.P.T Christopher : 94435 44628
Email : 100village@tvgm.org


*Website :*
**www.tvgm.org**
தினசரி வாக்குத்தத்தம், '100 கிராம ஊழியம்' அறிக்கை, மாதாந்திர வாக்குத்தத்த செய்தி மற்றும் முக்கிய நிகழ்ச்சிகள் வெளியிடப்பட்டு வருகிறது.

டிராப்ட், செக், M.T. அனுப்பும்போது உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண், காணிக்கையின் நோக்கம் யாவையும் TVGM தலைமை அலுவலக முகவரிக்கு தபால் அல்லது எங்கள் Email: 100village@tvgm.org மூலம் தெரியப்படுத்தி உதவுங்கள்.

**கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு டிராப்ட் , செக், போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டிய முறை**

TAMIL VILLAGE GOSPEL MISSION (100- கிராம ஊழியம், ஜெபவீடு)
T.V.G.M. SOCIAL SERVICE ( 80G வரிவிலக்கு உண்டு )
( சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி)
T.V.G.M. PUBLICATION ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)

( அல்லது )

MR. STEPHEN CHRISTOPHER,
SB A/c No:12491010 18538 CANARA BANK, Code : 1249 Puthur Branch, TRICHY.
இந்த கணக்கும் TVGM ஸ்தாபனத்திற்கே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.


Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011
Posting Date 25th at H.P.O. Trichy.



சகோ. P.T. கிறிஸ்டோபர் குடும்பத்தோடு மணமக்கள்



சகோ. R.C. குணக்குமார் குடும்பத்தோடு மணமக்கள்

**Return Requested**
TVGM Publication Trust
4/274, Hundred Village,
Somarasampettai,
Trichy - 620 102.
India.

To

. . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . .

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011
HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி